# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 03 வெள்ளிக்கிழமை 19.07.2024 கதிர் 305







# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய 22 ஆவது திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியானது!

## எதிர்வரும் வாரம் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றுக்கு வரும்?

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரசமைப்பின் ஏற்பாட்டில் காணப்படும் குறைபாட்டைத் திருத்தும் வகையில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அரசு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டாம் எனத் தான் நீதி அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களுக்குக் குறிப்பிட்டிருந்த நிலையில், ஜனாதிபதியின் பணிப்புக்கமைய சட்டமூலம் இன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

2➤



## ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தேக்க நிலையில்! மாற்றம் இல்லையேல் மொட்டுக் கட்சியின் சார்பில் தனி வேட்பாளர்

### பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் காரியவசம் தெரிவிப்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எவ்வகையிலான ஆதரவை வழங்குவது என்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹவுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தேக்க நிலையை அடைந்துள்ளது. இது தொடர்பில் உறுதியான ஒரு நிலைப்பாட்டை தெரிவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமைக்கு காரணம், ஜனாதிபதி தமக்கு வழங்கியுள்ள பதிலையிட்டு தமது கட்சி திருப்தியடையாமையே என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர்

2➤



## ஜப்பானுக்குப் புறப்பட்டார் அநுரகுமார திஸாநாயக்க

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. ஜப்பானுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

நேற்று அவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

தேசிய மக்கள்

2➤



## தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுக! யாழ்ப்பாணத்தில் கையெழுத்து வேட்டை





தேர்தல் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரிய கையெழுத்துப் பெறும் வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீன ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக

2➤

## தம்மிக்கவுக்குக எதிராக மொட்டு எம்.பி. போர்க்கொடி!



ஜனாதிபதித் தேர்தலில் தம்மிக்க பெரேராவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

“மொட்டுக் கட்சியில் களமிறங்க தம்மிக்க பெரேராவுக்கு உள்ள தகைமைகள் எவை? அவரைக் களமிறக்கும் முடிவை கட்சி இன்னும் எடுக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளரை கட்சியின் நிறைவேற்றுக் குழுவே தீர்மானிக்கும்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களை வளைத்துப் போடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தவொரு நிபந்தனையையும் மொட்டுக் கட்சி விதிக்கவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க வேண்டும் என்பது மட்டுமே எமது நிபந்தனை.

பொது வேட்பாளராக - பொதுக் கூட்டணியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் யானை சின்னத்தில் வரமாட்டார். ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் முடிவையே மொட்டுக் கட்சி எடுக்கும் என நம்புகின்றேன்” - என்றார். (05)

## ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது தொடர்பில்பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தம்முடனான முன்னைய கலந்துரையாடலின் போது நாட்டின் ஐக்கியத்தை பேணுவது உள்ளிட்ட பல யோசனைகள் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டதாகவும், ஆனால் ஜனாதிபதி அதற்கு உரிய பிரதிபலிப்பை காட்டவில்லை எனவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக ஜனாதிபதி தனது கட்சிக்கு உத்தியோகபூர்வ அறிக்கையை வழங்கினால், அதற்கமைய மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி ஜனாதிபதிக்கு எவ்வாறான நிபந்தனைகளை வழங்குவது என்பதை தீர்மானிக்க முடியும். எனினும், அதற்கு பதிலாக தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி.க்களை ஜனாதிபதிக்கு ஆதரவான அணிக்குள் ஈர்ப்பதற்காக முயற்சிகளே ஜனாதிபதி தரப்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் மற்றுமொரு சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூழ்நிலையை மாற்றா விட்டால், இறுதியில் மொட்டு கட்சியின் சிலர் ஜனாதிபதியுடன் இணைவதும், பொதுஜன பெரமுனவின் மிகுதி உறுப்பினர்கள் தம் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் தனி வேட்பாளரை நிறுத்துவது மாத்திரமே நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கு, கிழக்கு வாக்கு வங்கியின் மீது ஜனாதிபதி தனிக் கவனம் செலுத்துவதும் பேச்சுவார்த்தையில் தாமதத்தை அவர் ஏற்படுத்துவதற்கான ஒரு காரணமாக அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, மஹிந்தானந்த அலுத்கமகே மற்றும் பலர் ஏற்கனவே ஜனாதிபதிக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெஜ-48)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்பின் 83 ஆம் உறுப்புரையானது, அதன் (ஆ) எனும் பந்தியில் ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட என்னும் சொற்பதத்துக்குப் பதிலாக ஐந்து ஆண்டுகள் எனும் சொற்பதத்தைச் சேர்க்கும் வகையில் இந்தத் திருத்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கியதாகக் கருதப்படும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு எதிர்வரும் வாரம் உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கும் அல்லது தேர்தல் பணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலும் இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சியினரும், சிவில் அமைப்பினரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 22 ஆவது திருத்த வரைவை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலத்துடன் தொடர்புடைய ஒரு விடயத்துக்குச் சர்வஜன வாக்கெடுப்பு கோரும்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் நெருக்கடிக்குள்ளாகும் என்று எதிர்த்தரப்பினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

22 ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் வாரம் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 14 நாட்களுக்குள் இலங்கைப் பிரஜைகள் எவரும் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். (05)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் குறித்த கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

தேர்தல் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வழக்கமாக நிறைவேற்றப்படுவது இல்லை. அவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் இயற்றப்பட வேண்டும்.

இவ்வாறு பொய் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றமையால் பொதுமக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் என்பது தொடர்பாக 17 மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் குறித்த கையெழுத்துப் போராட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது. (05)

## ஜப்பானுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சக்தியின் வெளிவிவகாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜப்பானில் வாழ்கின்ற இலங்கையர்களுடனான சந்திப்பில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

அதன்படி, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு ஜப்பானில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை ஜப்பானில் உள்ள தொழில் வாண்மையாளர்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.

அத்துடன், ஜப்பானின் உயர்மட்ட இராஜதந்திரிகள் சிலரையும் அநுரகுமார எம்.பி. சந்திக்கவுள்ளார். (05)



# கொழும்புத்துறை இந்துவின் நடைபவனி

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ஊர் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் புலம்பெயர் தேசத்தில் இருந்தும் வருகை தந்த இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பலரும் இந்த நடைபவனியில் கலந்துகொண்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடைபவனியில் கலந்து கொண்டவர்களுக்குக் கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினரால் குளிர்பானம் வழங்கி வைக்கப்பட்டது.

இப் பாடசாலையின் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனி சிறப்பாக நடைபெற்றுள்ள நிலையில், எதிர்வரும் நாட்களில் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# முட்டை உற்பத்தியாளர்களுக்கு அநியாயமாக் கிடைக்கும் லாபம்!

ஒவ்வொரு முட்டை மூலமும் உற்பத்தியாளர்கள் 25 ரூபாய் நியாயமற்ற லாபத்தைப் பெறுவதாக முட்டை வர்த்தக சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, தற்போது ஒரு முட்டையை உற்பத்தி செய்வதற்கு சுமார் 20 ரூபாவே செலவாகும் என அதன் தலைவர் அனுர மாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பண்ணைகளில் இருந்து 45 ரூபா தொடக்கம் 50 ரூபா வரையிலான விலைக்கு மொத்த விற்பனையாளர்களுக்கு முட்டைகள் விற்கப்படுவதால், சந்தையில் முட்டை ஒன்றின் விலை தற்போது 50 ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும் அனுர மாரசிங்க சுட்டிக்காட்டினார். (04)

# இரத்தக் காயங்களுடன் ஆணொருவரின் சடலம்

*இரத்தக் காயங்களுடன் ஆணொருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.*

*மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெரதுவ பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.*

*54 வயதுடைய குடும்பஸ்தரே நேற்று இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*மரணத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.*

*இந்தச் சம்பவம் தொடர்பாக மாத்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஆனைக்கோட்டை தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழா!





பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதிப் பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசர ணையுடனும் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் ிகழ்வும் நாளை மாலை 3.30 மணிக்கு யாழ். பொதுசன நூலகத்திற்கு அருகில் உள்ள யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் நடைபெற உள்ளன . யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரம புஷ்பரட்ணத்தின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சத்திர சிகிச்சை பேராசிரியரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் மருத்துவ பீடாதிபதியும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உப தலைவருமாகிய ரவிராஜ் கலந்து கொள்ள உள்ளார். இந்நிகழ்வின் முடிவில் ஆனைக்கோட்டை தொல்லியல் ஆய்வு தொடர்பான செய்தியாளர் சந்திப்பும் நடைபெற உள்ளது. குறித்த நிகழ்வில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், துறைசார் வல்லுனர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## அட்டாளைச்சேனை தேசியப் பாடசாலைக்கு அரசாங்க அதிபரால் கதிரைகள் கையளிப்பு



(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசியபாடசாலைக்கென சுமார் ஐந்தரை இலட்சம் ஷரூபாய் பெறுமதியான கதிரைகள் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவினால் பாடசாலை அதிபர் ஏஎல்எம் பாயிஸிடம் உத்தியோகபூர்வமாக நேன்று கையளிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்பி.அனீஸ் (பழைய மாணவர் சங்க செயலாளர்) இன் வேண்டுகோளுக்கிணங்க அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிஎம். இர்பான் ஊடாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இவை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிஎம் இர்பான், அம்பாறை மாவட்ட செயலக கணக்காளர், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பாடசாலைப் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள்,பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




## திருகோணமலை அருள்மிகு மாதுமை அம்பாள் ஆலய ஆடிப்பூர மஹோற்சவம்



(ஹஸ்பர் ஏ.எச்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை அருள்மிகு கோணேஸ்வரப் பெருமானின் தேவியார் மாதுமை அம்பாளின் சந்நிதியில் ஆடிப்பூர பிரமோற்சவம்மங்களகரமான குரோதி வருடம் ஆடித்திங்கள் 13ம் நாள் (29.07.2024) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் (துவஜாரோகணம்) ஆரம்பமாகி, ஆடி மாத பூர நட்சத்திரத்தை (07-08-2024) தீர்த்தோற்சவமாகக்கொண்டு பத்து நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. தினமும்அபிஷேகம் காலை 8. மணி, மாலை 4 மணிக்கும், பூசைகள் காலை 10 மணி, மாலை 5 மணிக்கும், கொடித்தம்ப பூசை காலை 10.30 மணி, மாலை 5.45 மணிக்கும், வசந்த மண்டபப் பூசை - காலை 11.00 மணி, மாலை 6.15 மணிக்கும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து- உள்வீதி வலம் மதியம் 12 மணிக்கும், இரவு உள்வீதி, மற்றும் வெளிவீதி உலா 7 மணிக்கும் இடம்பெற்று அத்துடன் தினசரித் திருவிழா இனிதே நிறைவுறும்.

இரதோற்சவம் 06-08-2024 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறும்.

தீர்த்தோற்சவம் 07-08-2024 ஆம் திகதி நடைபெறவுள்ளது. புதன்கிழமை காலை ஆலயத்திலிருந்து அம்பாள் புறப்பட்டு காலை 7 மணிக்கு பாபநாசத் தீர்த்தக் கிணற்றில் தீர்த்தம் இடம்பெற்று, தீர்த்தோற்சவத்தின் பின் ஆலயத்தில் ஆடிப்பூர ருதுசாந்தி நடைபெறும்

# நான் பெற்ற ஒவ்வொரு விருதுகளும் அடுத்தகட்டத்துக்கு நகர்த்துகின்றன!

## நாடகத்துறைக் கலைஞர் ஸ்ரீகாந்த்



பேட்டி கண்டவர் -
**கௌஷல்யா ஜீவனி**
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்.



களுத்துறை டெல்கித் தோட்டத்தில் பிறந்தவர் தான் ரா.ஸ்ரீகாந்த் இவர் ஆரம்பக் கல்வியை டெல்கித் தமிழ் மகா வித்தியாலயத்திலும் சாதாரண தரத்தையும், உயர்தரத்தை கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியிலும் கற்று தற்போது கிழக்குப் பல்கலைக்கழகம் சுவாமி விபலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகத்துறையில் மூன்றாம் வருடத்தில் கல்வி கற்று வருகிறார்.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற அரச நாடக விழாப் போட்டியில் இவரால் எழுதி நெறியாள்கை செய்து தயாரிக்கப்பட்ட மயிர் கடவுள் எனும் நாடகம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்றுக் கொண்டது அத்தோடு 11 தேசிய விருதுகளுக்கும் சொந்தக்காரர் இவர். பிரதியாக்கம், நெறியாளர், தயாரிப்பாளர், ஒளியமைப்பாளர், நாடகக் கலை வடிவமைப்பாளர் என துறைசார் விடயங்களில் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

'2019 இல் இருந்து 2022



வரையும் தேசிய விருதுகளைப் பெற்றுக்கொண்டு வருகிறேன். நான் பெற்ற ஒவ்வொரு விருதுகளும் ஒவ்வொரு அனுபவங்கள் என்று சொல்லலாம். அதைவிட என்னை உற்சாகமாக அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கான ஒரு தைரியமாக இவ்வவிருதுகளைப் பார்க்கிறேன்.

நான் இதுவரையும் பெற்ற 10 தேசிய விருதுகளையும் என்னுடைய அடுத்த முயற்சிகளுக்கான விருதாகவே பார்க்கின்றேன்' என்கிறார் இளம் மாணவர் கலைஞர் ரா.ஸ்ரீகாந்த் இவருடனான சிறு கலந்துரையாடல் இது -

**கௌஷல்யா ஜீவனி –** தற்போது மாணவராக இருக்கும் உங்களது நாடகத்துறை மீதான ஆர்வம் குறித்து எம்முடன் பகிர்ந்து கொள்வீர்களா?

**ஸ்ரீகாந்த் –** சிறுவயது முதல் விருப்பு இருந்து வந்தது. பாடசாலைக் காலங்களில் அறிவிப்பு நிகழ்த்துவதிலும் மேடை நாடகங்களில் நடிப்பதிலும் கவிதைகள் எழுதுவதிலும் ஊர்த் திருவிழாக் காலங்களில் கலை நிகழ்வுகளில் பங்கு கொள்வதிலும் பெரிதும் ஆர்வம் காட்டினேன்.

2015 ஆம் ஆண்டு தேசியமட்ட தமிழ்த் தினப் போட்டியின் போது வில்லுப்பாட்டுப் போட்டியில் பங்கேற்று தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டேன். 2015 இல் பல்கலைக்கழகம் நுழைந்த பிறகு இத்துறை சார்ந்து நான் பார்த்து வியந்தும் எனக்குள் வியப்பை ஏற்படுத்தியவர்களுமே இந்த ஆர்வத்திற்கு காரணமாகினர்.

குறிப்பாக விரிவுரையாளர்கள் சிவராசா பிரதீப், தர்மலிங்கம் மோகனதாசன், வீவே விஷ்ணு ஆனந்தன், துஜான் ஆகியோரின் செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்ட நான் இவர்களைப் போலவே நாடகத் தில் எதையேனும் சாதிக்க வேண்டும் என நினைத்தேன். அதன் வழியே நாடகத் துறை சார்ந்து இவர்களோடு இன்று வரை பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். குறிப்பாக நான் தற்காலம் வரை 200க்கும் மேற்பட்ட நாடகப் படைப்புகளில் ஈடுபட்டிருக்கிறேன்.



**கௌஷல்யா ஜீவனி –** நாடகத் துறையில் இத்தனை ஈடுபாடு கொண்டுள்ள நீங்கள் உங்களது குடும்பப் பின்னணி பற்றிக் கூறுவீர்களா?

**ஸ்ரீகாந்த் –** என்னுடைய குடும்பத்தில் நாடகம் படித்தவர்களோ அல்லது நாடகச் செயற்பாடுகளில் ஈடுபடுகிறவர்களோ யாரும் இல்லை. நான் நாடகம் கற்றுக் கொண்டிருப்பதற்கும் நாடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதற்கும் காரணம் என்னுடைய குருவான சிவராசா பிரதீப் அவர்களே. நான் பெற்ற தேசிய விருதுகளுக்கு காரண கர்த்தா என்னுடைய குரு என்று சொல்வதே பொருத்தமாகும்.

என்னை ஒரு நடிகனாக, இயக்குனராக, தயாரிப்பாளராக, கதை ஆசிரியராக, மேடை முகாமையாளராக, மேடை வடிவமைப்பாளராக எல்லாத் துறைகளையும் கற்றுக் கொடுத்து என்னைச் செதுக்கிக் கொண்டிருப்பது என்னுடைய குரு.

எனது நாடகப் பயணங்கள் பெரும்பாலும் வடக்கு, கிழக்கு போன்ற பிரதேசங்களை ஒட்டியதாகவே காணப்படுகின்றன. காரணம் இப்பிரதேச மக்கள் சினிமாவை விட நாடகத்தின் மீது விருப்பம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஆகையால், எனது நாடகப் பயணங்களை இலகுவாகக் கொண்டு செல்லக்கூடியதாக உள்ளது.

**கௌஷல்யா ஜீவனி –** உங்களது நாடகப் பயணம் பற்றி விரிவாகக் கூற முடியுமா?

**ஸ்ரீகாந்த் –** முதலில் நான் ஒரு நாடகத்தில் நடிகனாக வேண்டும் என்று விருப்பம் கொண்டேன். காலப்போக்கில் நடிகனாக மட்டுமல்லாமல், நாடகத்தின் ஒட்டுமொத்தக் கோடுகளையும் கற்றுக்கொள்ள விருப்பம் என்னுள் வந்தது. அதன் வழியே குருவிடம் ஆலோசனை கேட்டேன். அவரும் ஒவ்வொன்றையும் நுணுக்கமாகக் கற்றுக் கொடுத்தார். நடிகனாய் மட்டும் நாடகத்தை வெற்றி பெறச் செய்ய முடியாது. நாடகத்தில் காணப்படுகின்ற எல்லா அம்சங்களும் சிறப்பாக இருந்தால் மட்டுமே நாடகத்தை வெற்றி பெறச் செய்ய முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன்.

**கௌஷல்யா ஜீவனி –** உங்களது நாடகத்தின் வழிமுறை எத்தகையது?

**ஸ்ரீகாந்த் –** என்னுடைய நாடகத்தின் படைப்புகளில் கருப்பொருள் சமூகத்தின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதாகக் காணப்படும். உதாரணமாக 2010 ஆம் ஆண்டு அரச நாடக விழாவில் என்னுடைய எழுத்துருவில், நெறியாள்கையில், தயாரிப்பில் மேடையேற்றப்பட்ட அங்கீகாரம் எனும் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்நாடகத்தின் கரு அதிகார நாற்காலிகளில் உள்ள அதிகாரிகளின் அடக்குமுறை பற்றியதாக அமைந்திருக்கும்.

அதேபோல் 2021 ஆம் ஆண்டு அரச நாடக விழாவில் மேடை ஏற்றிய மயிர் கடவுள் எனும் நாடகத்தின் கருப்பொருள் ஓர் இன அழிப்பைத் தாங்கிக்கொள்ள முடியாமல், கடவுளையும் இந்த நாட்டையும் வெறுத்து ஒதுக்குவதாக அமைந்திருக்கும். ஆக, என்னுடைய நாடகங்கள் எல்லாம் ஏதோ ஒரு பிரச்சினையை முன்னிறுத்த வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும்.

**கௌஷல்யா ஜீவனி –** களுத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட நீங்கள், உங்கள் ஊரின் நாடகத்துறை

(7ஆம் பக்கம் பார்க்க..)

# மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகள் வழங்கி வைப்பு





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு, மூதூர் கோட்டத்தில் உள்ள இருதய புரம், குச்சவெளி கோட்டத்தில் உள்ள கும்புறுபிட்டி, நாவற் சோலை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொன்றும் தலா 1930 ரூபா விலையான ஆற்றல் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் இன்று திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் கையளிக்கப்பட்டன.

இந்நூல்களை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசனால் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கப் பொருளாளர் இலக்ஷ்ம வாசன் இலக்ஷ்ம பெருமாள் மற்றும் திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க செயலாளர் கணபதிப் பிள்ளை சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்

## பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுகீட்டிற்கான பொருட்கள் அமைப்புகளுக்கு வழங்கி வைப்பு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை உரிய சமூக அமைப்புகளுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல் சர்த்தார் மிர்ஸா, அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம். ரிஸ்வான், எம்.என்.எம் சபீர், உட்பட சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




## தேசிய ஒருமைப்பாட்டு ஆற்றல் விருத்தி செயல் திட்ட நிகழ்வு



(எம் எப்.நவாஸ்)

நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவினால் யுஎஸ் எய்ட் மற்றும் குளோபல் கொம்யூனிட்டீஸ் அனுசரணையில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருக்கோணமலை மாவட்ட தமிழ் மொழி மூல தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர்களுக்கான ஆற்றல் விருத்தி செயல் திட்டம் அண்மையில் பொலனறுவையிலுள்ள தனியார் ஹோட்டலில் இடம்பெற்றது

இந் நிகழ்வில் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் திருமதி எஸ்.பி சாணிக்கா விஜேசூரிய மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான நிறுவகத்தின் உதவிப் பணிப்பாளர்களான திருமதி சந்துணிக்கா மற்றும் சுசந்த குமார மற்றும் யுஎஸ்எய்ட் நிறுவனத்தின் திட்ட அமுல்படுத்துனர்களான குளோபல் கொம்யூனிட்டீஸ் இன் ஸ்கோர் திட்டத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் நுவான் சுபசின்கவும் அதிதியாக கலந்து கொண்டனர்.

அவர்கள் வளவாளர்களாகவும் செயற்பட்டு இலங்கையின் நிலையான நல்லிணக்கத்தை கொண்டுவருவது தொடர்பாக தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகஸதர்களின் வகிபாகம் தொடர்பாகவும் எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பாகவும் விளக்கமளித்தனர்.

# பாதுகாப்பு இன்மையால் பதவியை பொறுப்பேற்க மருத்துவர் தயக்கம்

## சுகாதாரத்துறைச் செயலாளருக்கு கடிதம்

ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையின் புதிய பிரதி பணிப்பாளராக நியமிக்கப்படவுள்ள விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் சமல் சஞ்சீவ தனது நியமனத்தை இரத்து செய்யுமாறு கோரி சுகாதாரத்துறை செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி பதவியை பொறுப்பேற்கும் அளவிற்கு போதிய பாதுகாப்பு தனக்கு வழங்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தரம் குறைந்த கடத்தல் சம்பவங்கள் தொடர்பான உண்மைகளை நாட்டுக்கு வெளிப்படுத்திய தனக்கு, தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் தரப்பினரால் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது என அறியவந்துள்ள நிலையிலும் அது தொடர்பான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தவறியதால் இது விடயமாக தாம் சங்கடமடைந்துள்ளதாகவும் மருத்துவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை, விசேட வைத்தியர் சமல் சஞ்சீவவின் வீட்டுக்கும் அவருக்கும் போதிய பாதுகாப்பை வழங்குவது தொடர்பாக பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு ஆணைக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவினரின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ரெஜ-51)



# நிறுவனங்களை கட்டியெழுப்ப நிதி அமைச்சின் கடன் பக்கேஜ்!

சிரமங்களை எதிர்கொண்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை மீண்டும் மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்கென முதலீடு மற்றும் செயல்பாட்டு மூலதன வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிதி வசதிகள் கொண்ட பக்கேஜ் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின்போது அதை எதிர்கொண்ட நிறுவனங்கள் மற்றும் தற்போதும் இயங்கிக்கொண்டிருக்கும் துறைகள், சிறிய -நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவை வழங்குதல், அத்துடன் செயற்படாத கடன் வகையின் கீழுள்ள துறைகள் ஆகியவற்றிற்கு பணி மூலதனத்திற்கு 8 வீதம் மற்றும் முதலீட்டிற்கு 7 வீதம் என மானியத்துடனான குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை பெறும் வசதி இதன்மூலம் கிட்டும் எனவும் நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(ரெஜ–49)

# கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற அமர்வு – 2024



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான மாணவர் பாராளுமன்ற அமர்வு இன்று நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் அரசரட்ணம் பங்கையச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் பூ.திருக்குமாரும், சிறப்பு விருந்தினராக லீட்ஸ் நிறுவனத்தின் இணைப்பாளர் தே.அனுஜனும் கலந்து கொண்டனர்.






# நான் பெற்ற....



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சார் விடயங்கள் பற்றிப் பகிர்வீர்களா?

**ஸ்ரீகாந்த் –** களுத்துறை மாவட்டத்திலிருந்து இத்துறை சார்ந்து பல்கலைக்கழகம் செல்பவர்கள் குறைவு என்பதை விட இல்லை என்றே சொல்ல வேண்டும். அங்குள்ள பாடசாலைகளில் இப்பாடத்தை புகுத்தாமையே இதற்குக் காரணம் எனலாம். நான் படித்து முடித்த பிறகு களுத்துறை மாவட்டத்தில் அரங்காலையா எனும் நாடக அமைப்பின் கிளையை அமைத்து, நாடகத்தின் மீது ஆர்வம் உள்ளவர்களுக்கு நாடகம் பயிற்றுவிக்க எண்ணியுள்ளேன்.

என்னுடைய ஊரான களுத்துறை மாவட்டத்தில் நாடகத்துறை சார்ந்த ஆளுமைகள் குறைவு என்பதால்தான் வடக்கு கிழக்கில் உள்ள நாடக ஆளுமைகளோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

குறிப்பாக வவுனியாவில் உள்ள அரங்காலையா எனும் நாடக நிறுவனத்தோடு இணைந்து நான்கு ஆண்டுகள் நாடகச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறேன். எனக்கு முதலாவது சிறந்த நடிகருக்கான தேசிய விருது கிடைத்தது சிவராசா பிரதீப் அவர்கள் எழுதி, நெறியாள்கை செய்த மண் குளித்து எனும் நாடகத்திலேயே ஆகும்.

நாடக ஆளுமைகளான சிவராசா பிரதீப், மோகனதாசன் தர்மலிங்கம், துஜான், வீவே விஷ்ணு ஆனந்தன் ஆகியோருடன் நாடகப் பயணத்தைத் தொடர்கிறேன்.

என்னுடைய ஊரில் ஆரம்பக் காலங்களில் நாடகங்களைத் திருவிழா காலங்களில் மேடை ஏற்றியுள்ளேன். ஆனால், அவர்கள் ஆளுமைகளாக வெளிக்கொணரப்படவில்லை. அதைவிட அவர்களோடு நாடகத் துறையில் பணியாற்றிய அனுபவம் எனக்கில்லை என்பது நிதர்சனம்.

**கௌஷல்யா ஜீவனி –** குறுந் திரைப்படத்தில் நடிப்பது - நாடகத்தில் நடிப்பது ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள் பற்றிக் கூற முடியுமா?

**ஸ்ரீகாந்த் –** குறுந்திரைப்படங்களில் நடித்த அனுபவத்திற்கும் நாடகம் நடிப்பதற்கான அனுபவத்திற்கும் பெரும் வித்தியாசம் உள்ளது. கமராவிற்கு முன்னால் நடிக்கும் போது சிறு தவறு விட்டாலும் தெரிந்துவிடும். ஆனால், நாடகத்தில் அதைச் சமாளித்து நாடகத்தை நகர்த்தலாம்.

மேடையில் நடிப்பதற்கும் கமராவிற்கு முன்னால் நடிப்பதற்குமான உடல் தோரணை மாறும். இதுபோன்ற வித்தியாசங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆனால், நாடகத் துறை சார்ந்த அனுபவங்கள் இருந்தால் சினிமாவில் நடிப்பது இலகுவாக இருக்கும். இருப்பினும் இவ்விரு துறைகளிலும் பெற்ற அனுபவங்கள் பெரும் சவால்களையும சமாளிக்க உறுதுணையாக உள்ளன!




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2024இல் வெளியிடப்பெற்றது.